**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்</u>**

**முன்னிலை : திருமதி.அ.மலர்விழி, M.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**
**தஞ்சாவூர்.**

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 – சித்திரைத் திங்கள் 13 ஆம் நாள்)

**<u>அசல் வழக்கு எண்.105/2020</u>**

**<u>CNR No: TNTJ010050882020</u>**

**<u>OS/1188/2020</u>**

(1) ராஜாத்தி

(2) இளவர் ராகுல் (வயது 15)

இளவரின் பாதுகாப்பாளரும் அவரது தாயாருமான ராஜாத்தி

**......வாதிகள்**

**/எதிர்/**

(1) துளசிய்யா

(2) தங்கமணி

(3) லோகநாதன்

(4) ராஜேஸ்வரி ……. **பிரதிவாதிகள்**

இவ்வழக்கு, தஞ்சாவூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் **26.8.2020** அன்று கோப்பில் எடுக்கப்பட்டு, **5.9.2020** அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு **18.4.2022** அன்று என் முன்பாக இறுதி

விசாரணைக்கு வந்ததில் வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. **S. சுரேஷ்** அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் அழைத்து ஆஜராகாததால் வருகையில்லா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும், வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், இவ்வழக்கினை இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

தாவா சொத்துக்களில், சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களில் கூட்டு குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின்படி வாதிகளுக்கு 1/2 பாகம் பிரித்து கொடுக்க ஒரு முதல்நிலை தீரப்பாணை பிறப்பிக்கக் கோரியும், அதை ஏற்க மறுத்தால் வாதிகளுக்குரிய 1/4 பாகத்தின் உரிமை மற்றும் அனுபவத்தை பிரித்துக் கொடுக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், அதை அனுசரித்து ஒரு வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து வாதிகளுக்குரிய 1/4 பங்கின் அளவு, எல்லை மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்து வாதிகளிடம் ஒப்படைக்க ஒரு இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், வாதிகளின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட பாக விகித சொத்துக்களை வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் விட்டுக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும், பிரதிவாதிகள் மறுத்தால் வாதிகளின் தனித்த சுவாதீனத்தில் விட நீதிமன்றம் மூலம் வாதிகளுக்கு சுவாதீனம் கிடைக்க ஆவணம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்கக் கோரியும்,

வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகளிடமிருந்து வாதிகளுக்கு கொடுக்கக் கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :**

(2) தாவா சொத்துக்கள் பெரம்பூர் 2 ஆம் சேத்தி கிராமத்தில் அமையப்பெற்றுள்ளது. தாவா சொத்து விபரத்தில் "அ" பட்டியலில் உள்ள சொத்துக்கள் நன்செய் நிலங்கள் ஆகும் "ஆ" பட்டியலில் உள்ள சொத்துக்கள் புஞ்சை நிலங்கள் ஆகும். "இ" பட்டியல் சொத்துக்கள் மனையும் அதில் கட்டப்பட்டுள்ள வீடும் ஆகும். "ஈ" பட்டியல் சொத்துக்கள் கையிருப்பு தொகைகளின் விபரம் ஆகும். தாவா சொத்துக்கள் நல்லபுரவி என்பவருக்குச் சொந்தமானது. அவருக்கு ஒரே மகன் துளசிய்யா. துளசிய்யாவின் மனைவி பெயர் தங்கமணி. இவர்களுக்கு ராமலிங்கம், குமார், லோகநாதன் ஆகிய மூன்று மகன்களும், ராஜேஸ்வரி என்ற மகளும் வாரிசுகளாவர். துளசிய்யா- தங்கமணி ஆகியோரின் மூத்தமகன் ராமலிங்கம் திருமணமாகி அவரும் அவரது மனைவியும் எந்தவித வாரிசுகளுமின்றி காலமாகிவிட்டனர். துளசிய்யா-தங்கமணி ஆகியோரின் இரண்டாவது மகன் குமாரின் மனைவி ராஜாத்தி முதல் வாதியாவார். அவரது மகன் இளவர் ராகுல். குமார் 7.4.2016 அன்று வாதிகளை வாரிசுகளாக விட்டு திடீரென காலமானார். இறந்துபோன குமார் உயிருடன் இருந்த காலம் வரை வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டுக் குடும்பமாக வசித்து, இறந்த குமார், முதல் பிரதிவாதி பணியில் இருந்ததால் கூட்டுக் குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்தார். 4 ஆம் பிரதிவாதி ராஜேஸ்வரிக்கு ஆலக்குடியில் உள்ள கூட்டுக் குடும்பச் சொத்தான சுமார் 2 ஏக்கர் நிலத்தை விற்று

அத்தொகையை 1ஆம் பிரதிவாதி மற்ற பாகஸ்தர்களின் சம்மதத்துடன் கொடுக்கப்பட்டது. அவர் அத்தொகையை பெற்றுக்கொண்டு மீதமுள்ள சொத்துக்களில் தனக்கு எந்தவித பாகமும் வேண்டாம் என்றும் எந்தவித உரிமையும் கோரமாட்டேன் என்றும் உறுதியளித்தார். இந்நிலையில் இறந்த குமாருக்கும் 3 ஆம் பிரதிவாதி லோகநாதனுக்கும் கூட்டுக் குடும்பச் சொத்துக்களை நிர்வாகம் செய்வதில் பிரச்சினை ஏற்பட்டு இறந்துபோன குமாருக்கு நஞ்சை நிலங்களில் சுமார் 15 மா நிலமும் 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் சுமார் 15 மா நிலமும் வாய்மொழி பாகமாக ஒதுக்கப்பட்டது. 1ஆம் பிரதிவாதி ஓய்வூதியம் பெற்று வருவதால் தாவா சொத்துக்களில் 6 மா நிலம் ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் திடீரென குமார் இறந்துவிட்டதால் 3ஆம் பிரதிவாதி லோகநாதன் வாதிகளின் ஒப்புதலின் பேரில் சாகுபடி செய்து வந்த நிலையில் அவர்களுக்குரிய தொகையை சரிவர கொடுக்காததால் மனவருத்தம் ஏற்பட்டது. இளவர் ராகுலின் படிப்பு செலவுகளை பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்ளாததால் 1ஆம் வாதி அவரது கணவரின் பங்கை பிரித்துக் கொடுக்குமாறு உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலம் பிரதிவாதிகளிடம் கேட்டு வந்தார். அதேபோல் கூட்டுக் குடும்ப வருமானத்தைக் கொண்டு பெரம்பூர் கிராமம் 2 ஆம் சேத்தியில் 2 வது பிரதிவாதி பெயரில் மனை வாங்கப்பட்டு அதில் வீடும் கட்டப்பட்டிருந்தது. இறந்துபோன குமாரின் பங்கை அவர்களது வாரிசுகளான வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்த பங்கை பிரித்துக் கொடுக்குமாறு நண்பர்கள், உறவினர்கள் மூலம் கேட்டும் காலம்தாழ்த்தி வந்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் சொன்ன வாய்மொழி பாகப்பிரிவினையின்

அடிப்படையில் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகமும், 3 ஆம் பிரதிவாதி லோகநாதனுக்கு 1/2 பாகமும் கிடைக்கக் கூடியது. அதனால் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகம் பிரித்துக் கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவும், அதை ஏற்கமறுத்தால் நீதிமன்றம் மூலம் வாதிகளுக்குரிய 1/4 பாகத்தின் உரிமை மற்றும் அனுபவத்தை பிரித்துக் கொடுக்கவும், 1/2 பாகம் குறித்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

(3) இவ்வழக்கின் பிரதிவாதிகள் நீதிமன்றம் முன்னிலையாகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டனர். வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(4) **தீர்விற்குரிய பிரச்சினை**:

இவ்வழக்கு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்விற்குரிய பிரச்சினை.

**<u>தீர்வு</u>**

**(5)** வாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வாதிகள் தங்கள் வழக்குரையிலும், வா.சா.1ன் சாட்சியத்திலும், தாவா சொத்துக்கள் நல்லபுரவி என்பவருக்குச் சொந்தமானவை என்றும், அவரது ஒரே மகன் துளசிய்யா 1ஆம் பிரதிவாதி, அவரது மனைவி தங்கமணி 2ஆம் பிரதிவாதி, அவரது மகன் லோகநாதன் 3ஆம் பிரதிவாதி, மகள் ராஜேஸ்வரி 4ஆம் பிரதிவாதி என்றும், துளசிய்யாவின் மற்றொரு மகன் இறந்துபோன குமாரின் மனைவி 1ஆம் வாதி,

இறந்துபோன குமாரின் மகன் இளவர் ராகுல் 2 ஆம் வாதி என்றும், 1 ஆம் வாதியின் கணவர் குமார் உயிருடன் இருக்கும்போது வாதிகள் மற்றும் 1, 2, 3, 4 பிரதிவாதிகளும் கூட்டுக் குடும்பமாக இருந்துள்ள நிலையில் 4 ஆம் பிரதிவாதி கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் தனக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்கக் கேட்டதால் ஆலக்குடியில் உள்ள சொத்தை விற்று அந்த தொகையை அவரது பாகத்திற்கு கொடுக்கப்பட்டதாகவும், அவர் மீதமுள்ள சொத்துக்களில் தனக்கு பாகம் வேண்டாம் என்றும் உறுதிகூறியிருந்ததாகவும், இந்நிலையில் இறந்துபோன குமாருக்கும், 3 ஆம் பிரதிவாதி லோகநாதனுக்கும் கூட்டுக் குடும்ப சொத்துக்களை நிர்வாகம் செய்வதில் பிரச்சினை ஏற்பட்டதால் ஒரு வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும், அதில் தாவா சொத்தான நஞ்சை நிலங்களில் 15 மா நிலம் குமாருக்கும், 15 மா நிலம் 3 ஆம் பிரதிவாதிக்கும் 1 ஆம் பிரதிவாதி ஓய்வூதியம் பெற்று வருவதால் அவருக்கு 6 மா நிலம் ஒதுக்கப்பட்டது என்றும், வாய்மொழி பாகப்பிரிவினை படி உபயவாதிகள் நடந்து வந்த நிலையில் குமாருக்கு ஒதுக்கப்பட்ட பாகம் வாதிகளின் ஒப்புதலின்பேரில் 3 ஆம் பிரதிவாதி சாகுபடி செய்துவந்து, பின்னர் வாதிகளுக்குரிய தொகையை சரிவர கொடுக்காததாலும் வாதிகள் இறந்துபோன குமாரின் பங்கை அவரது நேரடி வாரிசுகளான இந்த வாதிகளுக்கு பிரித்துக் கொடுக்கும்படி உறவினர்கள் மூலம் கேட்டு வந்தார். குமாருக்கு ஒதுக்கப்பட்ட 15 மா நிலத்தை 3 ஆம் பிரதிவாதி லோகநாதன் அபகரித்துக்கொண்டார். கூட்டுக் குடும்ப வருமானத்திலிருந்து தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி முதல் கேட் எதிர்புறம் 2 மனைகள் முதல் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டதாகவும், அவற்றை ரூ.20,00,000/-

ற்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் அதில் குமாரின் பங்காக ரூ.10,00,000/- கொடுப்பதாக உறுதி கூறியிருந்ததாகவும் அவர்கள் இதுநாள்வரை அவ்வாறு கொடுக்கவில்லை என்றும், அதேபோல் கூட்டுக் குடும்ப வருமானத்தைக் கொண்டு பெரம்புர் கிராமம் 2 ஆம் சேத்தியில் 2 வது பிரதிவாதி பெயரில் மனை வாங்கப்பட்டு அதில் வீடும் கட்டப்பட்டிருந்தது என்றும், இறந்துபோன குமாரின் பங்கை அவர்களது வாரிசுகளான வாதிகளுக்கு பிரித்துக் கொடுக்குமாறு நண்பர்கள், உறவினர்கள் மூலம் கேட்டும் காலம்தாழ்த்தி வந்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் சொன்ன வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகமும், 3 ஆம் பிரதிவாதி லோகநாதனுக்கு 1/2 பாகமும் கிடைக்கக் கூடியது. அதனால் தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு 1/2 பாகம் பிரித்துக் கொடுக்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கவும், அதை ஏற்கமறுத்தால் நீதிமன்றம் மூலம் வாதிகளுக்குரிய 1/4 பாகத்தின் உரிமை மற்றும் அனுபவத்தை பிரித்துக் கொடுக்கவும், 1/2 பாகம் குறித்து ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கக் கோரியுள்ளதாகச் சொல்லியுள்ளார்.

(6) அறிவிப்பு சார்வாகியும் பிரதிவாதிகள் நீதிமன்றம் முன்னிலையாகாததால் எதிரவரில்லா நிலையாக்கப்பட்டனர். வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதிகள் தரப்பில் தங்கள் வழக்கை உறுதி செய்ய 24.5.2016 தேதியிட்ட 1 ஆம் வாதியின் கணவர் குமாரின் இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகலை

வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 21.11.2016 தேதியிட்ட தஞ்சாவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட வாரிசுரிமை சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளின் குடும்ப அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 1 ஆம் வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.4 ஆகவும், துளசிய்யா பெயரில் உள்ள கணிணி பட்டா வா.சா.ஆ.5 ஆகவும், நல்லபுரவி பெயரில் உள்ள கணிணி பட்டா வா.சா.ஆ.6 ஆகவும், கணிணி பட்டா நகல் வா.சா.ஆ.7 ஆகவும், தங்கமணி பெயரில் உள்ள கணிணி பட்டா நகல் வா.சா.ஆ.8 ஆகவும், தங்கமணி பெயரில் உள்ள கணிணி சிட்டா நகல் வா.சா.ஆ.9 ஆகவும், 8.5.2019 தேதியிட்ட மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அறிவிப்பு அசல் வா.சா.ஆ.10 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாமல் பிரதிவாதிகள் எதிரவிரல்லாநிலையாகி உள்ளனர். எனவே வாதிகளின் வழக்கும் வா.சா.1, 2 ன் சாட்சியங்கள் நம்பதகுந்ததாக உள்ளன. வழக்கு சொத்துக்கள் 1 ஆம் வாதியின் கணவரும், 2 ஆம் வாதியின் தந்தையுமான குமார் என்பவருக்கு பூர்வீக சொத்து என்பதால் குமாரின் தந்தையான 1 ஆம் பிரதிவாதி, அவரது சகோதரர் லோகநாதன், சகோதரி ராஜேஸ்வரி மற்றும் இறந்துபோன குமார் ஆகியோருக்கு சம பாகமாக தலா 1/4 பாகம் கிடைக்கக் கூடியது. இறந்துபோன குமாரின் தாயாரான 2 ஆம் பிரதிவாதியையும் 1, 2 வாதிகளையும் வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்பதால் இறந்துபோன குமாருக்கு கிடைக்க வேண்டிய 1/4 பாகம் அவரது வாரிசுகளுக்கும் சம பாகமாக கிடைக்கக் கூடியதாகும். எனவே, வாதிகளுக்கு 1/4 x 1/3 (வாதிகளுக்கு தலா 1/12) என 1, 2 வாதிகளுக்கு சேர்த்து 2/12 பாகம் கிடைக்கக்

கூடியதாகும். எனவே வாதிகளின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும், வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/12 பாகம் கிடைக்கக் கூடியது என இப்பிரச்சினைக்கு நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(7) முடிவாக, எதிரவரில்லா நிலையில் வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் தலா 1/12 பாகம் கிடைக்கக்கூடியது என முதல்நிலைத்தீர்ப்பாணை தாவா செலவுத்தொகையுடன் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

**(ஒ-ம்) அ. மலர்விழி**

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 - ராஜாத்தி (1ஆம் வாதி)

வா.சா.2 - ராஜகோபால்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.5.16 | குமார் என்பவரின் இறப்புச் சான்றிதழ் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 21.11.16 | குமார் என்பவரின் வாரிசுரிமை சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | ..................... | குடும்ப அட்டை அசல் |
| வா.சா.ஆ.4 | ..................... | 1ஆம் வாதி ராஜாத்தி என்பவரின் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் |
| வா.சா.ஆ.5 | ..................... | துளசியய்யா என்பவர் பெயரிலுள்ள கணினி பட்டா நகல் |
| வா.சா.ஆ.6 | ..................... | நல்லபுரவி என்பவர் பெயரிலுள்ள கணினி பட்டா நகல் |
| வா.சா.ஆ.7 | ..................... | பட்டா நகல் |
| வா.சா.ஆ.8 | ..................... | தங்கமணி என்பவர் பெயரிலுள்ள கணிணி பட்டா நகல் |
| வா.சா.ஆ.9 | ..................... | கணினி பட்டா நகல் |
| வா.சா.ஆ.10 | 8.5.2019 | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அறிவிப்பு அசல் |

**(ஒ-ம்) அ. மலர்விழி**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு**
**நீதிபதி, தஞ்சாவூர்.**

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அசல் வழக்கு எண்.105/2020</u>**

**<u>நாள். 26.4.2022</u>**